



# சுதந்திரன்

SUTANTIRAN

★ விலை சதம் 35 வ,ஆ. 2007 வைகாசி 20, ஜ. ஆகிர் 3, (2-6-76) புதன் புத்தகம் 30 இதழ் 12


## மக்களின் எதிர்ப்புக்கு அரசு பணிந்தது!

# தமிழ்த் தலைவர்கள் விடுதலை!





கொழும்பு பஜட் வீதியிலுள்ள சி. ஐ. டி. முகாமில் கடந்த பத்து நாட்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம், அவர்களும், கூட்டணி பா. உ.க்களான திருவாளர்கள் கா. பொ. இரத்தினம், வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம் ஆகியோரும் திங்கட்கிழமை (31-5-76) பிற்பகல் இரண்டு மணியளவில் திடீரென விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் விடுதலை செய்யப்பட்ட செய்தியை சி. ஐ. டி. ஏ. எஸ். பி. திரு, சில்வா இவர்களிடம் அறிவித்தார்.

குடியரசு தினமான சென்ற மே 22ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் பிரகடனத்தை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு விநியோகித்ததன் பேரில் சட்டத்தை மீறியதாக இவர்கள் கைது செய்யப்பட்டதும் விசேட விமானத்தில் கொழும்பு கொண்டு வரப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

தங்கள் தலைவர்களை கைது செய்ததை எதிர்த்தும் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரியும் தமிழ் மக்கள் ஏகோபித்த முறையில் குரல் எழுப்பினார்கள்; அத்துடன் கடந்த 24-5-76ல் தமிழ் ஈழமடங்கும் பூரண ஹர்த்தாலொன்றை வெற்றிகரமாக நடத்தி அரசுக்கு தங்கள் எதிர்ப்பை எடுத்து உணர்த்தினார்கள்; பாடசாலை மாணவ மாணவியர், மூன்று நாட்களுக்குப் பாடசாலைக்கு செல்லாமல் பகிஷ்கரிப்பு நடத்தினர்.

சட்டத்தை மீறியதற்காக கைது செய்யப்பட்ட கூட்டணித் தலைவர்கள் மீது நடவடிக்கையெடுக்கப்படுமென்று பிரதமர், கூறியிருந்தார். கைது செய்யப்பட்ட தலைவர்கள் மீது நீதிபதிகள் குழாம் முன்னர் (TRIAL AT BAR) விசாரணை நடைபெறவிருப்பதாக "டெயிலிநியூஸ்" ஏடு 31-5-76 இதழில் செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் அதே சமயம் யாரும் எதிர்பாராத விதத்தில் திடீரென 31-5-76 திங்கள் பிற்பகல் 2 மணிக்கு தலைவர்கள் விடுதலை செய்

—4-ம் பக்கம் பார்க்க

## 2-வது தடவையாக யாழ்நகரில் சட்ட மறுப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணி இரண்டாவது தடவையாக சென்ற சனிக்கிழமை (29.5.76) யாழ்நகரில் அவசரகால விதிகளை மீறி தனது சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தியது. வடபகுதி பொலிஸ் அதிபருக்கு முன் கூட்டியே பகிரங்கமாக அறிவித்துவிட்டு நடைபெற்ற இந்த சட்டமறுப்பு இயக்கத்தின்போது, வட்டுக்கோட்டை மாநாட்டு அரசியல் பிரகடனத்தைக் கொண்ட துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வாசித்துக்காட்டி விநியோகிக்கப்பட்டதுடன், அரசாங்க உடைமையான இ. போ. ச. வுக்கு சொந்தமான பேருந்துகளிலும், பேருந்து நிலையத்திலும், குறித்த பிரசுரங்களை தலைவர்களும் தொண்டர்களும் ஒட்டினர். இந்த இயக்கத்தின்போது எவரையும் கைதுசெய்ய பொலிசார் முன்வரவில்லை.

இந்த இயக்கத்தில் தந்தை செல்வாவின் தலைமையில் உடுப்பிட்டி முன்னாள் பா. உ. வும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம், வவுனியா முன்னாள் பா.உ, திரு. தா. சிவசிதம்பரம், கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோரும் மற்றும் தொண்டர்களும் பங்குபற்றினார்கள்;

இந்தச் சட்டமறுப்பு இயக்கத்தில் மேற்குறித்த தலைவர்களுடன் திரு குணரத்தினம், திரு. சேனாதிராசா, திரு. குலசேகரம், திரு. எஸ்.கே. மயில்வாகனம் ஆகியோரும் மற்றும் கிளிநொச்சி இளைஞர் பேரவையைச்சேர்ந்த இருவருமாக, மொத்தம் 10பேர் பங்குபற்றினர், அனைவரும் உதயசூரியன் சின்னம் பொறித்த குல்லாய்களையும்,

—3-ம் பக்கம் பார்க்க

### விடுதலைக் கூட்டணியின் அரசியல் பிரகடனம் இ.போ.ச. பேருந்துகளிலும் ஒட்டப்பட்டன!

## உயர் நீதி மன்றத்தில்

### குற்றப்பத்திரிகை தாக்கல்!

மே 22 சட்டமறுப்பின் போது கைது செய்யப்பட்டு கடந்த 10 நாட்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நால்வர் மீதும் சட்டமா அதிபதி திரு. சிவா பசுபதி 31—5—76ல் உயர் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகையை (INDICTMENT) தாக்கல் செய்துள்ளார், ஐந்து குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழ் ஈழத்தேசியத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தனிநாடு உருவாக்கும் யோசனையை தொண்டமான் அடியோடு நிராகரிக்கவில்லை!"

இலண்டனில் இயங்கும் உலக இயக்கமான சிறுபான்மை உரிமைக் குழுவினரின் வேண்டுகோட்படி, பிரபல பத்திரிகையாளரான திரு. வால்டர் சுவோஸ் அவர்கள், 1974ம் ஆண்டு இலங்கைக்கு வந்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து, தமிழ்த் தலைவர்களையும், சிங்களத் தலைவர்களையும் கண்டு பேசியும், புள்ளி விபரங்களைத் திரட்டியும் அவற்றை அடிப்படையாகக்கொண்டு ஓர் அறிக்கை தயாரித்து மேற்படி குழுவிடம் ஒப்படைத்தார். அக்குழு அந்த அறிக்கையை இலண்டனில் ஒரு சிறு நூலாக வெளியிட்டிருந்தது இந்த அறிக்கை நியாயமான முறையில் நடுநின்று எழுதப்பட்டிருக்கிறது என்ற கருத்துப்பட ஒரு தடவை பாதுகாப்பு துணை அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடியும் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியதாக நினைவு. இந்த அறிக்கையின் முதல் 13 பகுதிகள் ஏற்கெனவே சுதந்திரன் புதன் மலரில் வெளியிடப்பட்டிருக்கின்றன. 14வது பகுதி இன்று வெளியாகிறது அடுத்த இதழில் தமிழர் பிரச்சினை குறித்து ஆளுங்கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்கள் வெளிவரும். —ஆர்.

## இலண்டன் சிறுபான்மை உரிமைக்குழு வெளியிட்ட அறிக்கை பகுதி (14)

இந்தியத் தமிழர்களைப் பெரும்பாலாகப் பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் திரு. செல்வநாயகத்தின் கூட்டணியில் அங்கம் வகித்த பொழுதிலும், இந்தியத் தமிழர்களைப் பொறுத்தமட்டில், தனிநாட்டுக் கோரிக்கைக்கு இன்னும் அவர்கள் தயாராகவில்லை என்றே தெரிகிறது. இத்தீவின் மிகப் பிரபலம் வாய்ந்த தமிழ்த் தலைவர்களில் ஒருவரும், தொழிலாளர் காங்கிரசின் தலைமைப் பதவியை ஏற்று வழி நடத்துபவருமான திரு. எஸ். தொண்டமான் அவர்கள், தாம் தமிழர் ஐக்கிய முன்னணியினருடன் இணைந்து செயல்பட்டமைக்குரிய முக்கிய காரணம், "அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளும், உடன்பாடுகளும் காணப்படுவதற்குரிய பாதை முற்றிலும் அடைக்கப்பட்டமையே" எனக் கூறுகிறார். தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டபோது அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளையும் இவர் அங்கீகரித்துள்ளார். அந்தக் கோரிக்கைகள் பின்வருமாறு:—

1. தமிழ் மொழிக்கென வரையறுக்கப்பட்ட ஒரு இடம்.
2. இலங்கை ஓர் மதச் சார்பற்ற நாடாக விளங்க வேண்டும்.
3. சாதிப்பிரச்சினைகள் முற்ருக ஒழிக்கப்படல் வேண்டும்.
4. சிறுபான்மையினருடைய அடிப்படை உரிமைகள் அரசமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்படல் வேண்டும்.
5. இலங்கைப் பிரசாவுரிமைக்கு மனுச்செய்த சகலருக்கும் அது வழங்கப்படல் வேண்டும்.
6. நிர்வாகம் பரவலாக்கப்படவேண்டும்.

இது குறித்து விவேகமான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய சக்தி இன்னும் அரசாங்கத்துக்குண்டு என்ற நம்பிக்கையை தான் இழக்கவில்லை எனக்கூறும் திரு. தொண்டமான் அவர்கள், 1972ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச்சட்டம் ஓர் புதிய நிலையைத் தோற்றுவித்துள்ளது எனக் கருதுகிருர், "நாங்கள் பிரிக்கப்பட்ட இனமாகக் கடந்த காலங்களில் இருந்து வந்த நிலை நீங்கி இன்று ஒற்றுமைப்பட்ட ஓரினமாகச் செயல்படுகிறேம்" எனப் பெருமையுடன் நவில்கிருர்.

தனிநாட்டுக் கோரிக்கையை அவர் முற்று முழுதாக ஏற்காவிடினும், அத்தகைய தமிழ் நாடு ஒன்றினை உருவாக்கும் யோசனையை அவர் அடியோடு நிராகரிக்கவில்லை.

"இத்தீவின் நிலப்பகுதியில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கும், கரையோரப் பிரதேசங்களில் மூன்றில் இரண்டு பங்கும் எமது கரங்களிலேயே உள்ளன. அரிசி, மிளகாய் வெங்காயம், போன்றவற்றைத் தாராளமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் நாம் உள்ளோம் ஏராளமான உப்பு வளமும் எம்மிடமுண்டு." என்றவாறு நமது பொருளாதார வளம் பற்றியும் அவர் தொடர்ந்து எடுத்துக்காட்டுகிருர்.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்று வழி நடத்தும் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் வேண்டுகோட்படி பல இந்தியத் தமிழ்க் குடும்பங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேறும் பொருட்டு தத்தம் தோட்டங்களைவிட்டு வெளியேறுகின்றனர். கடந்த காலங்களில் மலையகப் பிரதேசங்களில் ஏற்பட்ட சில இனப் பூசல்களின் விளைவாகக் கிட்டத்தட்ட 40,000 பேர் வரையில் ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ளதாகத் திரு அமிர்தலிங்கம் தெரிவிக்கிருர். "அவர்களை இன்னும் மேலும், மேலும் வடக்கு நோக்கி வருவிக்க தற்போது நிலவும் பதட்ட நிலை தொடர்ந்து நீடித்து வரவேண்டும்" என அவர் விரும்புகிருர்.

"பிரிவினை தவிர்க்க முடியாதது ஏன்? இது எப்படிச் செயல்படும்?" என அவரிடம் வற்புறுத்திய பொழுது அதற்கான விளக்கத்தைப் பின்வருமாறு தெளிவாகக் கூறுகிருர். "நான் தனிப்பட்ட முறையில், ஒரே இலங்கை என்ற அமைப்புக்குள் எமது உரிமைகளை நிலைநாட்ட முடியும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டேன். எனினும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு குறுகிய கால அடிப்படையில் உருவாகும் எந்தப் பரிகாரங்களையும் நாம் நிராகரிக்கவில்லை. ஆனல் இதற்குரிய ஒரே நீண்டகாலத்தீர்வு எமது நாட்டைப்பிரித்தலிலேயே தங்கியுள்ளது. தற்போதைய சூழலில் இலவேளை அவர்கள் சமஷ்டி அமைப்புமுறையை எமக்குத் தர சம்மதித்தால் நாம் அதையும் மறுக்க மாட்டோம். ஆனல் இதன் மூலம் பயன் கிட்டும் என நான் கருதவில்லை. நாங்கள் இதுவரையும் பிரிவினைக் கொள்கையைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தவில்லை என்ருலும், அடுத்து வரும் எமது மகாநாட்டில் நிச்சயம் இதனை அறிவிப்போம்" —தொடரும்

# தமிழ் மக்கள் மீது காவற்படையினர் நடத்திவரும் தாக்குதலுக்கு சட்டக் கல்லூரி மாணவர்கள் கண்டனம்!

"ஈழம் வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் மீது அண்மைக் காலமாக அரசின் காவற்படையினர் நடாத்தி வரும் மனிதாபிமானமற்ற தாக்குதலை இலங்கைச் சட்டக் கல்லூரி தமிழ் மன்றம் வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளையில் மேற்படி தாக்குதலுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இனிமேலும் இவ்வாருன தாக்குதல்களை நடாத்தி மக்களை வன்முறைச் செயல்களுக்குத் தூண்டும் நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு சகல நடவடிக்கைகளையும் விரைவில் மேற்கொள்ளுமாறும் நாட்டின் பிரதமரை பொறுப்புணர்ச்சியுடன் கேட்டுக்கொள்கிறது."

மேற்படி பிரேரணையை பிரேரித்து உரையாற்றிய திரு. இ. த. விக்னராசா, கடந்த சில வருடங்களாக ஈழம் வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் மீது பொலிசார் நடாத்தி வரும் மனிதாபிமானமற்ற தாக்குதல் பருத்தித்துறை சம்பவத்துடன் தமிழன் எந்த அரசியற் கட்சியைச் சார்ந்தவனுயினும் அவன் தமிழன் என்ற குற்றத்திற்காக தாக்கப்படுவான் என்பதை ஐயந்திரிபுற நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ்ப் பேசும் மக்கள் சிறப்பாக வாலிபர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் தமிழர்களுடைய ஜீவாதாரப் பிரச்சினைகளில் அனைவரும் தமிழர் என்ற எண்ணத்துடன் செயற்பட வேண்டிய அவசியத்தை மேற்படி சம்பவம் உணர்த்தியுள்ளது. புத்தளம், வட்டுக்கோட்டை பருத்தித்துறை ஆகிய இடங்களில் நடைபெற்ற தாக்குதல்கள் இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் மக்கள் அனைவரும் தமிழர்கள் என்பதையும், தமிழர்களை அரசோ அரசின் ஏவற்படைகளோ மாற்ருன்தாய் மனப்பான்மையுடனேயே தாக்கும் என்பதை காட்டியுள்ளது. இவ்வாருன தாக்குதல்கள் இனியும் நடைபெறுமாயின் அதன் பலாபலன்களுக்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க நேரிடும் என வற்புறுத்தினர்.

மேற்படி பிரேரணையை அனுமதித்து திரு. அ, ஸ்ரீகரன் பேசும் பொழுது, "பருத்தித்துறை சம்பவத்திற்கு முன்னர் அரசு ஆதரவாளர்களை பொலிசார் பாதுகாத்து வருகின்றனர் என எண்ணியிருந்தேன். ஆனல் பருத்தித்துறைச் சம்பவம் அரச ஆதரவாளராக இருந்தாலும் தமிழன் என்ருல் பொலிசார் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதில் தாக்குதல் நடாத்துவார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன். அன்றைய சம்பவத்தை நேரில் பார்த்தவன் என்ற ரீதியிலும், அரச ஆதரவாளனுக இருந்து அமைப்பாளர்களுடன் இயங்கியவன் என்ற ரீதியிலும் திடமாகக் கூறிவைக்கிறேன்; அரசு இனியும் பாராமுகமாக இருக்குமாயின் தமிழ் இளைஞர் ஓரணியில் திரண்டு இவ்வாருன மனிதாபிமானமற்ற தாக்குதல்களை நிறுத்த மாற்ற நடவடிக்கை எடுப்பதைவிட வேறு வழியில்லை என வற்புறுத்தினர்.

[illegible] பேசும் பொழுது இவ்வாறு கண்ட[illegible] தீர்மானங்கள் நிறைவேற்றுவதுடன், எதிர்காலத்தில் எந்த ஒரு பிரதமரையோ, அமைச்சரையோ தமிழ் மக்கள் வரவேற்கக் கூடாது; வரவேற்க மாட்டோம் என திடசங்கற்பம் பூணவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் திரு. சு. சிறீஸ்கந்தராசா, திரு. ஸ்ரீதரன், திரு. யோ. சத்தியநாதன், திரு. அமுதன் ராஜகாரியர், செல்வி வினோதினி மகேசன் ஆகியோர் மேற்படி பிரேரணை மீது பேசினர்.

இறுதியில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

## முல்லைத்தீவில் பூரண ஹர்த்தால்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பா. உ.களை அரசு கைதுசெய்ததை எதிர்க்கும் முகமாக கடந்த 24ம் திகதி நடைபெற்ற பாடசாலைப் பகிஷ்கரிப்பும் — கடையடைப்புகளும் முல்லைத்தீவு பகுதியும் பூரண வெற்றியை ஈட்டியுள்ளது.

வவுனியா பா. உ. திரு சே. மா. செல்லத்தம்பு தலைமையில் முல்லைத்தீவு பகுதியெங்கும் தொண்டர்களால் [illegible]கே பகிஷ்கரிப்புச் செய்திகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்தே இப் பகுதியெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது;

முல்லைத்தீவு முள்ளியவளை ஒட்டுசுட்டான் — தண்ணீரூற்று, மாங்குளம் புதுக்குடியிருப்பு ஆகிய முக்கிய பகுதிகள் எங்கும் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்தது. பாடசாலைப் பகிஷ்கரிப்பை பொறுத்தளவில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி, முல்லைத்தீவு கிறீஸ்தவ பாடசாலைகளும் வெறிச்சோடிக்கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை பொலீஸ் தாக்குதல் விசாரணைக்கு என்ன நடந்தது? எல்லாம் வெறும் புஸ்வாணமா?

## நடராசாவுக்கும் விநோதனுக்கும் வந்த 'சுடலை ஞானம்' அடங்கிவிட்டதா?

பருத்தித்துறையில் பொது மக்கள் மீது அண்மையில் நடைபெற்ற பொலிசாரின் வெறித்தாக்குதலுக்கு எதிராக நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட விசாரணையின் பெறுபேறு என்ன? எல்லாம் புஸ்வாணமாகிவிட்டதா? 1974ம் ஆண்டு தை பத்தாம் திகதி உலகத் தமிழ் மாநாட்டில் அமைதியாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் பொலிசாரால் வெறிகொண்டு காரணமின்றித் தாக்கப்பட்டது பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்காதவர்கள், பருத்தித்துறை சம்பவத்துக்காகவா நடவடிக்கையெடுக்கப் போகிறார்கள்? பருத்தித்துறையில் பொலிசாரிடமிருந்து அடி விழுந்தவுடன், 'ஆளுங்கட்சியில் இருந்தும் என்ன' என்ற தோரணையில் அறிக்கைவிட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சு. நடராசா என்ன செய்யப்போகிறார்? இவ்வாறான கேள்விகள் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

நாமறிந்தவரை — இப்பிரச்சினை மீது எதுவுமே நடக்கப்போவதில்லை. அமைச்சர்களை வரவேற்கச் சென்ற கூட்டத்தில் அடி விழுந்ததென்றாலும், அங்கு அடிபட்டவர்கள், உதைபட்டவர்கள், மிதிபட்டவர்கள், துவைபட்டவர்கள் அனைவரும் அடிமைத் தமிழர்களே என்பது அரசுக்கு நன்கு தெரியும்.

1974ம் ஆண்டு—தை பத்தாம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'ஜாலியன் வாலாபாக்' நிகழ்ச்சிகள் எந்த நாளும் தமிழர்களின் மனதை விட்டு நீங்காது. ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்டு, அமைதியாகத் திரண்டிருந்த அந்த மக்களிடையே முன்னறிவிப்பும் எச்சரிக்கையுமின்றி—காரணமின்றி பொலிசார் புகுந்து மிருக வேட்டை நடத்தியதும்—அதன் காரணமாக ஒன்பதின்மர் உயிரிழக்க நேரிட்டதும்—ஆயிரக்கணக்கானோர் மண்டை பிளந்து, கால், கை முறிந்து—அவலப்பட்டு மிதிபட்டு அல்லோலகல்லோலப்பட்டு ஓடி ஒழிந்ததும்—தமிழ்த் தாய்மார்கள் சேலை அவிழ்ந்து, மானத்தைக் காத்திட மறைவிடம் நாடி ஓடியதும்—இத்தகைய அந்தப் பயங்கர இரவின் நிகழ்ச்சிகள் யாவும் தமிழர் மனதிலே எழுதப்பட்டிருக்கின்றன.

பொலிசாரின் இந்த அட்டூழியம் பற்றி — மிலேச்சத்தனம் பற்றி — விசாரிப்பதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டுமென தமிழ் மக்கள் அத்தனை பேரும் ஏகோபித்த குரலில் பிரதமரிடம் கோரினர். தமிழர் கூட்டணியினர் மாத்திரமல்ல — குமாரசூரியர் உட்பட சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்கள் அத்தனைபேரும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து அம்மையாரிருக்குமிடம் தேடிச் சென்று ஆணைக்குழு நியமிக்குமாறு கோரியதாக அப்போது ஏடுகளில் செய்தி வந்தன.

அமைச்சர் குமாரசூரியர், அனுரா பண்டாரநாயகா போன்றோர் கூட, கமிஷன் இதோ வருகிறது அதோ வருகிறது என்று மேடைகளில் கூறி வந்தார்கள்; ஆனால் இவர்களுக்கெல்லாம் பட்டை நாமம் சாத்தி தமிழ் மக்கள் முகத்திலறைவதுபோல — கமிஷன் விசாரணைக்கு அவசியமில்லையென்று பிரதமர் கூறிவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த "ஜாலியன் வாலாபாக்குக்கு" பொறுப்பாக இருந்தவரெனக் கருதப்பட்ட பொலிஸ் அதிகாரியும் 'புறமோஷன்' பெற்றுச் சென்றார்.

அன்று ஒரு பாரபட்சமற்ற கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று குற்றவாளிகளான பொலிசார் தண்டிக்கப்பட்டிருப்பார்களேயானால், பருத்தித்துறை சம்பவம் இன்று நடந்திராது.

பருத்தித்துறையிலும் பொலிசாரின் தாக்குதலால் — எதுவித முன்னறிவித்தலும், எச்சரிக்கையுமற்ற தாக்குதலால் — தமிழர்கள் —தமிழ்ப்பெண்டிர்கள்— சிறுவர்கள், தாக்குதலுக்குள்ளாகினர் இந்தப் பயங்கரத்தாக்குதல் பற்றி நடராசாவும், விநோதனும்கூட, 'சுடலைஞானம்' கொண்டு அழுது வடிந்திருந்ததை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

கமிஷன் என்றார்கள்; விசாரணை என்றார்கள்; டி. ஐ. ஜியின் இரண்டாவது அறிக்கை, மூன்றாவது அறிக்கை என்றெல்லாம் பத்திரிகைகளில் வருகிறது ஆனால் இது சம்பந்தமாக எதுவுமே நடந்தாகக் காணோம்; எதுவுமே நடக்காது என்பதையும் நாம் இப்போதே கூறி வைக்கவிரும்புகிறோம். கண்துடைப்புக்காக இரண்டு பொலிஸ் காரரை இடமாற்றம் செய்து விடுவதால் பிரச்சினை தீரப்போவதில்லை.

பருத்தித்துறையின் சுதந்திரக்கட்சி அமைப்பாளராக திரு. நடராசா இருப்பதால், அவருக்கு—

பருத்தித்துறை பலநோக்கக் கூட்டுறவு சங்கத் தலைவர் பதவி—

யாழ் மாவட்ட விவசாய நீதிமன்றத்தலைவர் பதவி—

கள் உற்பத்தி விற்பனவு அங்கத்தவர் பதவி —

கடற்றொழிலாளர் சங்கத் தலைவர்—

போன்ற இன்ன பிற பதவிகளில் அவர் ஒட்டியிருக்கலாம்; இன்னும் பல பதவிகள் அவருக்கு கிடைக்கலாம்.

ஆனால், சுதந்திரக்கட்சித் தலைமைக்கு—சுதந்திரக் கட்சிக்கு—அவர்களின் ஏவலாளரான பொலிசாருக்கு—ஆயுதப் படையினருக்கு — தமிழர்கள் எப்போதும் ஆளப்படும் இனமாக, அடிமை இனமாகவே காட்சியளிக்கிறார்கள்!

அடிமைநிலையைத்துடைத்தெறிந்தால் மட்டுமே தமிழன் எந்தக்கட்சியிலிருந்தாலும், மனிதனாகக் கணிக்கப்படுவான். இதையே தமிழர் விடுதலைக்கூட்டணி வற்புறுத்திவருகிறது.

பதவிக்குப் பல்லிளிக்கும் சுதந்திரக்கட்சியின் தமிழ் அமைப்பாளர்கள் எப்படிப் போனாலும் — தமிழ் பொதுமக்கள் — குறிப்பா தாக்குதலுக்குள்ளான பருத்தித்துறை தமிழ் மக்கள் இந்த உண்மையை உணர்ந்தாலே போதுமானது,

---

### அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையின் பொதுக்கூட்டம்

அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை அமைப்புகளுக்கான பொதுக்கூட்டம் அதன் மத்திய செயற்குழு உறுப்பினர்களுடன் 6-6-76 அன்று பி. ப. 2 மணிக்கு திருக்கோவில் 5 மார்க்கண்டேயன் அவர்களது இல்லத்தில் நடைபெறவுள்ளது. பல முக்கிய விடயங்கள் அவசரமாகத் தீர்மானிக்கப்படவுள்ளது. மேலும் 'விடுதலைப் போராட்டத்தில் எமது பங்கு' எனும் விடயம் பற்றி பல அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

---

### கோபாலன் பிணையில் விடுதலை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டின் போது பொலிஸ் தாக்குதலுக்குள்ளாகி, கைது செய்யப்பட்டு, யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த தம்பிலுவில் தமிழ் இளைஞர் பேரவை செயலாளர் திரு. பொன் கோபாலன் 27-5-76ல் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். கோப்பாய் பா. உ. திரு. இ. கதிரவேற்பிள்ளை இவரைப் பிணையெடுத்தார். இப்போது தம்பிலுவிலிலுள்ள தனது வீட்டில் தங்கி ஓய்வு எடுத்து வருகிறார். பொன் கோபாலன், த. இ. பே. செயலாளர் தம்பிலுவில்-1 எனும் முகவரிக்கு தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளுகிறார்.

---

### நெடுங்கேணியில் பூரண ஹர்த்தால்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை கைது செய்ததை ஆட்சேபித்து நெடுங்கேணியில் வர்த்தக ஸ்தாபனங்கள், கடைகள் யாவும் அடைக்கப்பட்டு பூரண ஹர்த்தால் 28-5-76 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. 24ம் திகதி அடைப்பதற்கு போதிய அவகாசம் இன்மையால் 28ம் திகதி நெடுங்கேணி தமிழ் இளைஞர் பேரவையினர் முன்னின்று ஹர்த்தாலை நடாத்தினர். முன்னெப்பொழுதும் இல்லாத உணர்ச்சி இக் ஹர்த்தாலின்போது காணக்கூடியதாக இருந்தது.

---

## 2-வது தடவையாக யாழ்நகரில் சட்ட...

—1-ம் பக்கத் தொடர்

உதயசூரியன் சின்னங்களையும் அணிந்திருந்தனர்.

சட்டமறுப்பிலீடுபடும் பத்துப்பேரினுடைய பெயர் விபரங்களை கோப்பாய் பா. உ. திரு சி. கதிரவேற்பிள்ளை யாழ் பொலிஸ் சுப்ரீண்டெண்டனிடம் முன்கூட்டியே கையளித்திருந்தார்.

முதலில் யாழ்பெரிய தபாற் கந்தோருக்குள் சென்று திரு. மு. சிவசிதம்பரம், தா. சிவசிதம்பரம் வி. ஆனந்தசங்கரி பா. உ. ஆகியோர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். அதிலிருந்து இயக்கம் தொடங்கியது. தலைவர்கள் துண்டுப் பிரசுரம் விநியோகித்துச் செல்ல, மக்கள் வெள்ளம் பின்தொடர்ந்ததால், பல தடவைகளில் போக்குவரத்தும் ஸ்தம்பித்தது.

சட்டத்தரணி சு. நடராசா. மு. ஆலாலசுந்தரம், ஆர். விசுவநாதன், தா. சங்கரப்பிள்ளை, சி. கதிரவேற்பிள்ளை பா. உ வி. யோகேஸ்வரன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம். வி. தர்மலிங்கம் பா. உ. ஆகியோர் நிலையங்களை அவதானித்த படி நின்றிருந்தனர்,

பழைய சந்தை வாசலில் வைத்து, திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், தா. சிவசிதம்பரம் ஆகியோர் விடுதலைக்கூட்டணியின் மாநாட்டுத் தீர்மானத்தை மக்களுக்குக்கேட்கும்படி உரக்க வாசித்துக் காட்டிக்கொண்டிருந்தனர்.

இதன் பின்னர் அனைவரும் பேருந்து நிலையத்தைச்சென்றடைந்தனர், அங்கு தந்தை செல்வாவின் தலைமையில், கடையொன்றில் முன்னால் போடப்பட்டிருந்த மேசை மீது ஏறி நின்று கிளிநொச்சி பா. உ திரு. வி. ஆனந்த சங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பிரகடனத்தை வாசித்தார். திரு. ஆனந்தசங்கரி வாசித்துமுடித்ததைத் தொடர்ந்து, அங்கு பேசிய திரு. மு. சிவசிதம்பரம், தமிழினத்தின் ஒரே இலட்சியம் விடுதலைதான் என்றும், அந்த இலட்சியத்தின் அடிப்படையில் இணைந்து நிற்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியை பிரிக்க யாராலும் முடியாதென்றும் முழக்கமிட்டார்.

இதைத்தொடர்ந்து கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரியும் மற்றும் இளைஞர்களும் பேருந்து நிலையத்துக்கு சென்று அங்கு நின்றபேருந்து வண்டிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பிரகடனத்தைக்கொண்ட பிரசுரத்தை ஒட்டினார்கள். திரு. ஆனந்த சங்கரிமுதன்முதலாக துண்டுப்பிரசுரத்தை யொட்டிய பேருந்து வண்டியின் இலக்கம் 24 ஸ்ரீ 5234 ஆகும். இதைத்தொடர்ந்து பேருந்து நிலைய 'ஷெட்'களிலும் துண்டுப் பிரசுரங்களை திரு. சிவசிதம்பரம் ஒட்டினார்.

காலை 9 மணிமுதல் 11 மணி வரை நடந்த இந்த இயக்கத்தின்போது பொலிசார் எங்கோ தலைமறைவாகிவிட்டனர். சட்டமறுப்பு இயக்கமும் மாநாட்டுப் பிரகடனத்தை தமிழ் மக்கள் அறியச்செய்யவேண்டும் என்ற கூட்டணியின் திட்டமும் பூரணவெற்றி பெற்றது. அவசரகாலச்சட்டவிதிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் முறித்து எறியப்பட்டன.

---

## கொழும்பில் இன்று கே. சி. நித்தியானந்தாவின் இரண்டாவது உரை!

தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக்கிளையின் ஆதரவில் தந்தை செல்வாவின் இல்லத்தில் இன்று (2-6-76) மாலை 6 மணிக்கு திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் 'தமிழரும் தொழிற்சங்க வரலாறும்' எனும் தலைப்பில் திரு. கே. சி. நித்தியானந்தா அவர்கள் தமது தொடர் சொற்பொழிவின் இரண்டாவது பகுதியை நிகழ்த்துகிறார். கூட்டணி ஆதரவாளர்கள் அழைக்கப்படுகின்றனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

**சிவகுமாரன் நினைவு தினத்தில்
விடுதலையான தலைவர்கள் உரையாற்றுவர்!**

எதிர்வரும்யூன்5ம் திகதி சனிக்கிழமைஉரும்பராயில் நடைபெறவிருக்கும் தியாகி சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டத்தில் கடந்த 10 நாட்கள் தடுப்புக்காவலிலிருந்து விடுதலையாகிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் உரையாற்றுவார்கள்!

# அரசியல் அரங்கில் கேட்ட எதிரொலிகள்!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கமும், கூட்டணிப் பா. உ.க்களான திருவாளர்கள் பண்டிதர் கா. பொ. இரத்தினம் வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம், ஆகியோர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் வானில் கேட்ட சில எதிரொலிகளை தொகுத்துத் தந்திருக்கிறோம்.

—ஆர்.

●

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் தனிநாடுகோரிக்கையை மூர்த்தண்யமாக எதிர்ப்பதாக பிரதமர் கூறியிருக்கிறார். இது உண்மையானால், தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக எடுத்துக் கூறும் எங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை ஏன் அவர்களிடமிருந்து அரசு பறிக்கவேண்டும்? ஜனநாயக அடிப்படை உரிமைகளைப் பறிப்பது விஷமிகளின் கரங்களைப் பலப்படுத்துவதாகவே அமையும். எனவே இலங்கை முழுவதும் பரந்து வாழும் பெரும்பான்மையான தமிழர்களின் சார்பாக பிரதமரைக்கேட்டுக்கொள்ளுகிறேன் — கைதுசெய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள்!"

—வண. டாக்டர் ஜேம்ஸ் மேதர் (டெய்லிமிரர் 26-5-76)

●

"தமிழ்த் தலைவர்களை கைதுசெய்து தடுப்புக்காவலில் வைப்பதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது, கைதுசெய்வதன் மூலமும், அடக்குமுறையின் மூலமும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ, பிரச்சினைகளுக்கு தீர்வு காணவோ முடியாது. தமிழ்த் தலைவர்கள் உடன் விடுதலை செய்யப்படவேண்டும்!"

—சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் திரு. என். சண்முகதாசன். (வீரகேசரி 30-5-76)

●

"கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவர்கள்மீது வழக்குத் தொடருவதன் மூலம் தமிழர்கள் உள்ளக் குமுறல்களை ஆற்றமுடியாது. அவர்களை விடுதலை செய்து பேச்சுவார்த்தைகளை நடத்தி, தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு முன்வரவேண்டும். தனி நாட்டுக் கோரிக்கையைத் தவிர— தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்தும் சகல உரிமைப் போராட்டங்களுக்கும் இ.தொ, கா. ஆதரவு அளிக்கும்!"

இ. தொ. கா; பொதுச்செயலாளர் செல்லச்சாமி, (வீரகேசரி 30-5-76)

●

"இலங்கையில் தனித்தமிழ் நாடு நிறுவும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்ந்துள்ள நிலைமையும், தேசிய பேரவை உறுப்பினர் சிலர் உட்பட போராட்டத் தலைவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதும் இலங்கை அரசினதும், பொதுமக்களினதும் முக்கிய கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டியனவாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உத்தியோக மொழி தமிழ்மொழியாக இருக்கச் செய்வதுடன் எந்தவொரு பிரஜையும் தான் விரும்பியபடி சிங்களத்திலோ, தமிழிலேயோ அரசுடன் தொடர்புகொள்ளும்உரிமையும் சட்டபூர்வமானதாக்கப்படவேண்டும்!"

—ஐ.தொ.கா. தலைவர் ஜனாப் ஏ. அசீஸ் (வீரகேசரி 26.5.76)

●

ஜனநாயக அடிப்படை உரிமைகளை மறுப்பது அநீதியாகும். அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தமிழ்த் தலைவர்களை கைதுசெய்து சிறையிலடைத்திருப்பது முட்டாள்தனமானது. அவர்களை விடுதலை செய்யவேண்டும்.

—பிரின்ஸ் குணசேகரா பா. உ.

●

தமிழர்களுடைய நியாயமான உரிமைகளை வழங்குவதைவிடுத்து பொலிஸ் நடவடிக்கை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. ஆகையால், தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினையை அரசு தீர்க்கவேண்டுமென்றும், கைது செய்யப்பட்ட தமிழ்த்தலைவர்கள் விடுதலை செய்யப்படவேண்டுமென்றும் இலங்கை சமசமாஜக் கட்சியின் வடபிரதேசக் கிளை வற்புறுத்துகிறது.

—வீரகேசரி (31-5-76)

●

கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், தமிழரசுக்கட்சியைசேர்ந்தவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது தமிழ் பிரதேசங்களில் ஒரு பதட்ட நிலைமையை உருவாக்கக் கூடியதாகவிருக்கிறது. தமிழர் பிரச்சினைக்கு, பொலிஸ் நடவடிக்கை மூலமும், கைது செய்து காவலில் வைப்பதன் மூலமும் தீர்வுகாண முடியாது;

—கம்யூனிஸ்ட் கட்சி யாழ் பிரதேசக் கிளை (ஈழநாடு 30-[illegible])



பத்து நாட்களுக்கு முன்னர் சட்டமறுப்பு போராட்டக் களத்தில் தானைத்தலைவர் தளபதி அமிர்தலிங்கம் கைதாகிய மறக்கமுடியாத காட்சி

# சாவகச்சேரி பா. உ.வின் மகன் மீது புகையிரத அதிகாரிகள் வெறித்தாக்கு!

தடுப்புக்காவலிலிருந்த தனது தந்தையைப் பார்ப்பதற்காக கொழும்பு வந்த சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினத்தின் மகன் கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள புகையிரத பாதுகாப்பு அதிகாரிகளால் தூஷணை வார்த்தைகளாலும் இனத்துவேஷ வார்த்தைகளாலும் இம்சிக்கப்பட்டு, தாக்கப் பட்டதோடு அவரை விடுவிப்பதற்காக திரு. நவரத்தினத்தின் வேண்டுகோளின் பேரில் அங்கு சென்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கச்செயலாளர் திரு. இ. பேரின்பநாயகமும் தகாதவார்த்தைகளால் தூஷிக்கப்பட்டதுடன் அவரும் தடுத்து வைக்கப்பட்டார்.

இந்த வெறிச் சம்பவம் சென்ற 29—5—76 இரவு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் நடைபெற்றது. இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை யெடுக்கும்படி திரு. பேரின்பநாயகம்,புகையிரத திணைக்கள முகாமையாளருக்கு அவசரக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இச்சம்பவம் பற்றிக்கூறப்படுவதாவது:-

"தடுப்புக் காவலிலிருந்த திரு. வி. என். நவரத்தினத்தின் மகன், தந்தையைப் பார்ப்பதற்காக 29—5—76 மத்தியானம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்திருக்கிறார். ஏதோ ஒரு காரணத்துக்காக அவரை கொழும்புகோட்டை நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து வைத்திருந்திருக்கிறார்கள். இதையறிந்த திரு. நவரத்தினம், திரு. பேரின்பநாயகத்துக்கு டெலிபோன் செய்து கோட்டை புகையிரத நிலையத்துக்குசென்று தமது மகனை விடுவித்து வருமாறு கேட்டிருக்கிறார்.

திரு. நவரத்தினத்தின் வேண்டுகோட்படி திரு. ஆர். சிறிபத்மநாதனுடன் அன்று இரவு 10 30 மணிக்கு நிலைய அதிபரின் அனுமதியுடன் கோட்டை நிலையத்துக்குள்ளே சென்ற திரு. பேரின்பநாயகம், அங்கு புகையிரத பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மத்தியில் திரு. நவரத்தினம் அவர்களுடைய மகன் தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். திரு. நவரத்தினத்தின் மகன், தூஷணைவார்த்தைகளாலும், ஆத்திரமூட்டும் வார்த்தைகளாலும் அவமதிக்கப்படுவதையும், அவரது தலைமயிரை அதிகாரியொருவர் பிடித்து இழுத்து இம்சித்ததையும் திரு. பேரின்பநாயகம் கவனித்தார். திரு. நவரத்தினத்தின் அரசியல் கொள்கைகளையும், அவரது நடத்தையையும் அவமானப்படுத்தும் முறையிலும் இனதுவேஷமாகவும் அவர்கள் பேசியதை திரு. பேரின்பநாயகம் அவதானித்தார்.

இதுபற்றிபாதுகாப்பு அதிகாரிகளின் பொறுப்பதிகாரிக்கு திரு. பேரின்பநாயகம் முறையிட்டபோது, ஓர் அதிகாரி திரு. பேரின்பநாயகத்தின் மீதும், அவருடன்கூடச் சென்ற சிறீபத்மநாதன் மீதும் பாய்ந்தார். இந்த இருவர் மீது கூட பலாத்காரத்தைப் பாவிக்க முயன்றார் திரு. பேரின்பநாயகம் இதற்குக் கடும் ஆட்சேபனை தெரிவிக்கவே — கூடாத வார்த்தைகளால், அவரை. அதிகாரிகள் திட்டினர்களாம். இதையடுத்து திரு. பேரின்பநாயகமும் அவருடன் கூடச்சென்றவரும் இரவு 3 மணிவரை அங்கு தடுத்து வைக்கப்பட்டனர்.

நடந்ததைக் கேள்வியுற்ற திரு. வி. என். நவரத்தினம் தடுப்புக் காவலிலிருந்த படியே ஹொரவப்பொத்தான பா. உ. திரு ரி. பி. ஹேரத்துடன் தொடர்பு கொண்டார். அதை அடுத்து திரு. ஹேரத் எடுத்த உடன் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து திரு. நவரத்தினத்தின் மகனும், ஏனைய இருவரும் வெளியே செல்லுமாறு விடப்பட்டனர்.

இதுசம்பந்தமாக பூரண விசாரணை நடத்த வேண்டுமென்று திரு. பேரின்பநாயகம் புகையிரத திணைக்கள முகாமையாளர் திரு. நவரத்தினவைக் கோரியுள்ளார்.

## மக்களின்...

—1-ம் பக்கத் தொடர்

யப்பட்டார்கள். தடுப்புக் காவலிலிருந்த தலைவர்களிடம் சி. ஐ. டி: ஏ எஸ். பி. திரு.சில்வாசென்று "நீங்கள் வீடுகளுக்கு திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்" என்று தெரிவித்தார்.

தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சித்தான் தலைவர்களை விடுதலை செய்யும் முடிவுக்கு அரசு வந்ததாக கருதப்படுகிறது. ஆறுகுற்றச் சாட்டுக்களின் மீது தலைவர்கள் மீது வழக்குத் தொடரப்பட விருப்பதாகவும் செய்திகள் வந்தன.

விடுதலையாகி வெளியே வந்த தலைவர்களை உடுப்பிட்டி முன்னாள் பா. உ.வும், கூட்டணி செயலதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம், சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன், ஆகியோருட்பட தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் பஜெட் ரோட்டிலுள்ள சி. ஐ. டி. முகாம் வாசலில் வைத்து வரவேற்று அழைத்து சென்றனர்.

தலைவர்கள் வெளியே வந்தவுடன் உடுப்பிட்டி சிவா தன்னுடைய இல்லத்தில் உடனடியாக தேநீர் விருந்தளித்து கௌரவித்தார்.

திங்கள் மாலை கொழும்பு வரும் தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வாவை, விடுதலையான தலைவர்கள் சந்தித்துப் பேசிவிட்டு, செவ்வாய் (1-6-76) காலை யாழ்தேவியில் யாழ்ப்பாணம் புறப்பட்டார்கள்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் விடுதலையாகி வரும் தலைவர்களுக்கு பிரமாண்டமான வரவேற்புக்கள் [illegible] ஏற்பாடு [illegible]

சிக்கன செலவுக்கு
மில்க்வைற் -/25 சதம்
துண்டு சோப் பாவித்து அதிக இலாபம் அடையுங்கள்.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜூன் மாதம் 2-ந் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org